திரு. எம். சின்னசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படி டிஃபால்டர்ஸாகி இருப்பவர்கள் பெரும்பாலும் பெரிய விவசாயிகள். அவர்கள் கடன் கட்டக்கூடிய வசதியிருந்தும் கட்டாமல் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய படங்களைப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் பெரிய விவசாயிகளாயிருந்தாலும் சிறிய விவசாயிகளாக இருந்தாலும், சங்க விதிகளை மீறுகின்ற போது வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டாத நிலையிலிருக்கும் போது எடுக்கப்படும் நடவடிக்கைகளின் அடிப்படையில் அவர்கள் அந்தப் பதவியிலிருக்கும் தகுதியை இழக்கிறார்கள். ஜப்தி நடவடிக்கை முதற்கொண்டு மேற்கண்ட கடனைத் திருப்ப வேண்டுமென மைய அரசு மாநில அரசுக்கு அறிவுறுத்தியிருப்பதாலும், உலக வங்கி விவசாயிகள் கடனை எப்படியும் வசூலித்தாகவேண்டும், இல்லையென்றால் தமிழ்நாடு பிளாக் லிஸ்ட் செய்யப்படும் என்று அச்சுறுத்தியிருப்பதாலும், கடுமையாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் அந்த நடவடிக்கைகளின் கீழ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமலை கல்லுடைக்கும் தொழிற் கூட்டுறவு சங்கம்.

*வினா எண். 593— திரு. சோ. அழகர்சாமி, திரு. ஏ. டி. கருப்பையா, திரு. செ. சிவசாமி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் சிவகெங்கை தாலுக்கா திருமலை என்ற கிராமத்தில் திருமலை கல்லுடைக்கும் தொழிற் கூட்டுறவு சங்கம் என்று ஒரு சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தச் சங்கம் எப்போது பதிவு செய்யப்பட்டது? அதனுடைய நிர்வாகஸ்தர்கள் நியமிக்கப்பட்டவர்களா அல்லது அந்த உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா? அதன் பொது சபையைக் கூட்ட வேண்டுமென்று தொடர்ந்து 10 ஆண்டுகளாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உறுப்பினர்களால் கோரிக்கைகள் அனுப்பப்பட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) அந்தச் சங்கம் 14—7—1970 அன்று பதிவு செய்யப்பட்டது. 16—7—1970-ல் துவங்கப்பட்ட சங்கத்திற்கு 30—9—1972 வரை நிர்வாகஸ்தர்கள் நியமிக்கப்பட்டனர். 30—9—1972 க்குப் பின்னர் மகாசபை கூட்டப்பட்டு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்

1982 மார்ச் 22]

தெடுக்கப்பட்டனர் இல்லை. 30—9—1972-லும் அதற்கு முன்னும் பின்னரும் பல முறை மகாசபைக் கூட்டங்கள் நடை பெற்றிருக்கின்றன.

[முற்பகல் 9.50]

திரு ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் சிவகெங்கை தாலுக்கா திருமலை என்ற கிராமத்தில் உள்ள குவாரி கோவாப்பரேட்டிவ் சொசைட்டிக்கு அரசு மானியம் கொடுத்ததா, அந்த மானியம் இப்போது திரும்பப் பெறப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மானியம் கொடுத்ததைப் பற்றிய தகவல் என்னிடம் தற்போது இல்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சிவகெங்கையில் இருக்கிற கல்லுடைக்கும் லேபர் சொசைட்டியினுடைய பதவிக் காலம் 30—6—1975-லே முடிந்துவிட்டது. அங்கே பலவிதமான முறைகேடுகள் நடந்து, ஏராளமான தவறுகள் நடந்து எல்லாவிதமான காண்ட்ராக்ட்களும் தனிப்பட்ட காண்ட்ராக்டர்களுக்கே கொடுக்கப்பட்டு, கொள்ளை அடிக்கப் பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட முறைகேடுகள் இருப்பதால் அந்த போர்டை நீக்கி தலைவரும் நீக்கப்படுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தச் சங்கம் 30—9—1972-லே அமைக்கப்பட்ட சங்கமாகும். ஆனால் 1976-லேயே இதனுடைய பதவிக்காலம் முடிந்துவிட்டபோதும் கூட, தேர்தல் நடத்துவதற்குக் காலம் ஆகும் என்ற காரணத்தால் 1976-லேயே அந்தச் சங்கங்களுக்கெல்லாம் நீட்டிப்பு அளிக்கப்பட்டது. அந்தக் கால நீட்டிப்பின் அடிப்படையில் இயங்கிக் கொண்டிருந்த இந்தச் சங்கத்தினுடைய நிர்வாகஸ்தர்கள் யார் யார் தவறு செய்தார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்தச் சங்கத்தினுடைய நிர்வாகக் குழுவைக் கலைப்பதற்கு அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1975 க்குப் பிறகு நிர்வாகக் கமிட்டி கூட்டங்கள் நடைபெற்றதாகச் சொன்னார்கள். ஆனால் 65 ஆவது செக்ஷன் படி, அவர்களை ஏன் கலைக்கக்கூடாது என்று நோட்டீஸ் அனுப்பியும், 30—6—1975 அன்று தலைவர் உட்பட 3 டைரக்டர்களை பதவியில் இருந்து நீக்கியும் அவர்கள் சட்ட விரோதமாகத் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தனிப்பட்டவர்களுக்கு காண்ட்ராக்டுகள் கொடுத்து சொசைட்டிக்கு லாபம் வராத நிலையில், அங்கே உள்ள மொத்தம் 6 டைரக்டர்களில் 5 பேர்கள் அதைக் கலைக்க வேண்டும், அங்கே

நிர்வாகம் சரியாக நடக்கவில்லை என்று சொல்லியும், இது போன்ற பல குற்றச்சாட்டுக்களைக் கூறிய பிறகும், செக்ஷன் 65-ன் பிரகாரம் அவர்கள் கொடுக்கப்பட்ட நோட்டீசுக்கு பதில் இருக்கிறதா? இதே போன்று மற்ற சொசைட்டிகளுக்கும் இப்படிப்பட்ட கால நீட்டிப்பு கொடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கத்தைப் பொறுத்த வரைக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போலவே 30—6—1975-ல் 3 டைரக்டர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டும், அவர்கள் தவறுதலாக தொடர்ந்து பணியில் இருப்பதைக் கண்டுபிடித்து அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. மகாசபைக் கூட்டத்தைப் பொறுத்தவரைக்கும் 26—6—1978 அன்றும் 26—12—1980 தேதிகளில் மகாசபைக் கூட்டம் நடந்திருக்கின்றது. அவர்கள் தவறு செய்தார்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டு 30—6—1975-லே நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, அவர்களுடைய பதில் பெறப்பட்டு, அந்த நிர்வாகம் கலைக்கப் படக்கூடிய ஆய்வு தற்போது இருக்கின்றது.

திரு செ. சிவசாமி : தலைவர் அவர்களே, 65 செக்ஷன் என்குயரி பிரகாரம் கலைக்கப்பட வேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதன்படி கலைக்க ஏற்பாடு செய்வதாக சொல்லப்பட்டது. ஆனால் இந்தநாள் வரையில் அந்த சொசைட்டி இயங்கிக் கொண்டு இருக்கின்றது. அதை உடனடி யாகக்கலைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, That being an independen enquiry by an independent authority அரசே கலைக்க வேண்டுமென்று உத்தரவிட முடியாது. அரசைப் பொறுத்த வரைக்கும் ஆதாரங்கள் அடிப்படையில் நடவடிக்கை எடுங்கள், ஆய்ந்து நடவடிக்கை எடுங்கள். ஷோ காஸ் நோட்டீஸ் கொடுத்து எடுங்கள் என்றுதான் சொல்ல முடியும். சட்டமும் அப்படித்தான் இருக்கிறது. சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, இந்த சட்டப்படி எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கையினால் சங்கம் கலைக்கப்பட ஆய்வு இருக்கிறது என்பது தகவலிலிருந்து அரசு அறிகிறது. அதைத்தான் சொன் னேன்.

திருச்சி மாவட்டத்திற்கு கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 594—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா —

திருச்சி மாவட்டத்திற்குக் கூடுதல் மூன்றாவது மாவட்ட நீதி மன்றம் District and Sessions Cour அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.